**அக்டோபர் – 13**

# TNPSC துளிகள்

- இந்திய மகளிர் குத்துச் சண்டை அணியானது ரஷ்யாவில் நடைபெற்ற உலக குத்துச் சண்டை சாம்பியன்ஷிப் போட்டியை 48 கிலோ பிரிவில் மஞ்சு ராணி பெற்ற வெள்ளிப் பதக்கம் உட்பட நான்கு பதக்கங்களுடன் நிறைவு செய்தது.
- கென்யாவைச் சேர்ந்த எலியுட் கிப்கோஜ் என்பவர் ஆஸ்திரியாவின் வியன்னாவில் 1 மணி 59:40 நிமிடங்களில் INEOS 1:59 என்ற போட்டியை நிறைவு செய்ததன் மூலம் 2 மணி நேரத்திற்குள்ளான ஒரு மாரத்தான் போட்டியை ஓடி நிறைவு செய்த முதல் நபராக உருவெடுத்துள்ளார்.
- சீனாவில் நடைபெற்ற 2019 WTA (Women Tennis Association - மகளிர் டென்னிஸ் சங்கம்) வுஹான் ஓபனின் 6வது பதிப்பில் பெலாரசைச் சேர்ந்த டென்னிஸ் வீரரான ஆரினா சபாலெங்கா என்பவர் மகளிர் ஒற்றையர் பட்டத்தை வென்றுள்ளார்.
  - இந்த வெற்றியின் மூலம், சீனாவின் வுஹானில் அடுத்தடுத்துப் பட்டங்களை வென்ற முதலாவது வீரர் என்ற பெருமையை ஆரினா பெற்றார்.

# தேசியச் செய்திகள்

## SARAS ஆஜீவிகா மேளா 2019

- கிராமிய கைவினைஞர் சங்கத்தின் பொருள்கள் விற்பனைக்கான 2019 ஆம் ஆண்டின் ஆஜீவிகா மேளாவானது புது தில்லியில் உள்ள இந்தியா கேட் என்ற பகுதியில் நடந்து வருகின்றது.




- இந்த மேளா ஆனது தீன்தயாள் அந்தியோதயா யோஜனா - தேசிய கிராமப்புற வாழ்வாதாரத் திட்டத்தின் (Deendayal Antyodaya Yojana-National Rural Livelihoods Mission/DAY-NRLM) ஒரு முன்முயற்சியாகும்.
- இது DAY-NRLMன் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட கிராமப்புற பெண்கள் சுய உதவிக் குழுக்களை ஒரே தளத்தின் கீழ் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது அவர்களின் திறன்களைக் வெளிக் காட்டவும், அவர்களின் தயாரிப்புகளை

விற்பனை செய்யவும் மற்றும் அவர்களை மொத்தமாக பொருள்கள் வாங்குபவர்களுடன் இணைக்கவும் உதவும்.

## இந்தியா- வங்க தேசம் ஆகியவற்றிற்கிடையேயான 2வது ஒருங்கிணைந்த ரோந்துப் பயிற்சி

- இந்தியக் கடற்படை - வங்கதேசக் கடற்படை ஆகியவற்றிற்கிடையேயான ஒருங்கிணைந்த ரோந்துப் பயிற்சி - 2019ன் (Coordinated Patrol - CORPAT) 2வது பதிப்பானது வடக்கு வங்காள விரிகுடாவில் நடத்தப் பட்டது.
- விசாகப் பட்டினத்தில் இந்த இரு கடற்படைகளுக்கு இடையே நடைபெற்ற இப்பயிற்சியின் முதல் பதிப்பைத் தொடர்ந்து 2 நாட்கள் நடைபெறும் CORPAT பயிற்சியானது நடைபெற இருக்கின்றது.
- 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தியக் கடற்படை - வங்கதேசக் கடற்படை ஆகியவற்றிற்கிடையேயான கார்பட் பயிற்சியானது கப்பல் செலுத்துத் திறன் வளர்ச்சி, ஒருங்கிணைந்த ஹெலிகாப்டர்களுடன் பறக்கும் பயிற்சிகள், கடலில் ரோந்து விமானங்களில் செல்லுதல் ஆகியவற்றில் பங்கெடுக்கும் கடற்படையினருடன் இருதரப்புப் பயிற்சியாக இதனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்திய விளையாட்டுகள் உச்சி மாநாடு – உடற் தகுதி: 10 பில்லியன் டாலர் வாய்ப்புகள்

- ‘இந்திய விளையாட்டு உச்சி மாநாடு - உடற் தகுதி: 10 பில்லியன் டாலர் வாய்ப்புகள்’ என்ற உச்சி மாநாடானது மத்திய விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் துறை அமைச்சரான கிரண் ரிஜ்ஜு என்பவரால் புது தில்லியில் திறந்து வைக்கப் பட்டது.
- இது இந்திய தொழில் துறைக் கூட்டமைப்பு மற்றும் மத்திய இளைஞர் விவகாரங்கள் & விளையாட்டுத் துறை அமைச்சகம் ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- முதலாவது இந்திய விளையாட்டுகள் உச்சி மாநாடு - 2019 என்ற மாநாடும் இந்த நிகழ்வின் போது தொடங்கி வைக்கப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## தர்மா கார்டியன் 2019

- இந்தியாவிற்கும் ஜப்பானிற்கும் இடையிலான இராணுவ ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக 2வது கூட்டு இராணுவப் பயிற்சியான ‘தர்மா கார்டியன் 2019’ என்ற பயிற்சியானது மிசோரமில் நடத்தப்பட இருக்கின்றது.
- இந்தக் கூட்டு இராணுவப் பயிற்சியானது இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர உறவை மேம்படுத்துவதோடு பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடவும் உதவும்.
- தர்மா கார்டியன் பயிற்சியானது 2018 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் நடைபெற்று வரும் ஒரு வருடாந்திரப் பயிற்சியாகும்.

## வஜ்ரா பிரஹார் 2019 - 10வது பதிப்பு

- இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான ஒரு கூட்டு இராணுவப்

பயிற்சியான ‘வஜ்ரா பிரஹார்’ என்ற பயிற்சியானது வாஷிங்டனில் தொடங்கியது.

- இந்தப் பயிற்சியானது 2018 ஆம் ஆண்டில், ராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் நடைபெற்றது.
- 2019 ஆம் ஆண்டு செப்டம்பரின் தொடக்கத்தில் அமெரிக்காவில், இரு நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியான ‘யுத் அபியாஸ் 2019’ என்ற பயிற்சியை மேற்கொண்டனர்.

### 2019 ஆம் ஆண்டின் சி40 உலக மாநகராட்சித் தலைவர்கள் உச்சி மாநாட்டின் 7வது பதிப்பு

- டென்மார்க்கின் கோபன்ஹேகனில் 2019 ஆம் ஆண்டின் சி40 உலக மாநகராட்சித் தலைவர்கள் உச்சி மாநாட்டின் 7வது பதிப்பானது நடத்தப்பட்டது.
- பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைப்பதும் காலநிலைப் பின்னடைவை மேம்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.
- சி40 என்பது போக்குவரத்து, எரிசக்தி பயன்பாடு மற்றும் நுகர்வு ஆகியவற்றில் நிலையான மாற்றங்களைச் செய்வதில் ஒன்றிணைந்த முக்கிய சர்வதேச நகரங்களின் குழு ஆகும்.
- நகரத்தின் பசுமைப் போக்குவரத்து இயக்கத்திற்காக கொல்கத்தாவானது மதிப்பு மிக்க “6வது சி40 நகரங்கள் ப்ளூம்பெர்க் தொண்டு விருதுகள் 2019” என்ற விருதைப் பெற்றுள்ளது.




## மாநிலச் செய்திகள்

### ஒய்எஸ்ஆர் காந்தி வேலுகு திட்டம் 2019

- உலகப் பார்வை தினத்தை முன்னிட்டு ஆந்திர மாநில அரசு ஒய்எஸ்ஆர் காந்தி வேலுகு திட்டம் 2019 என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், ஆந்திராவின் பூர்வீகவாசிகள் தங்கள் கண்களை பரிசோதித்துக் கொள்ள முடியும். மேலும் இதில் அவர்களுக்கு கண்ணாடிகளும் வழங்கப் படும்.

- இது ஃபிட் இந்தியா என்ற ஆரோக்கியமான இந்திய இயக்கத்தின் ஒரு பகுதியாகும்.
- மாவட்ட ஆட்சியர் தலைமையிலான ஒரு பணிக் குழுவானது ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்திட்டத்தைக் கண்காணிக்கும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## PII-ICRC விருதுகளின் 13வது பதிப்பு

- மனிதாபிமானம் தொடர்பான சிறந்த கட்டுரை மற்றும் சிறந்த புகைப்படத்திற்காக 2019 ஆம் ஆண்டின் இந்தியப் பத்திரிக்கை நிறுவனம் (Press Institute of India - PII) - சர்வதேச செஞ்சிலுவை சங்கக் குழு (International Committee of the Red Cross - ICRC) ஆகியவற்றின் 13வது பதிப்பு விருதுகள் அறிவிக்கப் பட்டுள்ளன.
- இந்த விருது வழங்கும் விழாவானது PII மற்றும் ICRCன் புது தில்லிப் பிராந்திய தூதுக் குழு ஆகியவற்றால் இணைந்து புது தில்லியில் நடத்தப்பட்டது.
- "மனிதாபிமானப் பிரச்சினைகளில் காலநிலை மாற்றத்தின் தாக்கம்" என்ற கருப்பொருளின் கீழ் இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

| □□□□□□ | □□□□□ | □□□□□□□/□□□□□□□□□□ |
| --- | --- | --- |
| சிறந்த கட்டுரை | ஊர்வசி சர்க்கார் | 'எங்கள் வீடுகள் மறைந்து வருகின்றன. யாரும் கவலைப் படுவதில்லை' - PARI (People's Archive of Rural India) இணையதளத்தில் வெளியிடப்பட்டது |
| சிறந்த புகைப்படம் | ஜி.சிவபிரசாத் (தி மாத்ருபூமி) & ரிஜோ ஜோசப் (மலையாள மனோரமா) | 'இதயத்திற்கு நெருக்கமானது' 'உயிருக்காக ஓடுகின்றது' |

## விண்வெளியில் நடந்த முதலாவது மனிதர் காலமானார்

- 1965 ஆம் ஆண்டில் முதல் முறையாக விண்வெளியில் நடந்த ரஷ்ய விண்வெளி வீரரான அலெக்ஸி லியோனோவ் என்பவர் ரஷ்யாவின் மாஸ்கோவில் காலமானார்.
- 1965 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், லியோனோவ் மற்றும் அவரது மற்ற கூட்டாளியான பாவெல் பெல்யாயேவ் ஆகியோர் வோஸ்கோட் 2 என்ற திட்டத்தின் கீழ் விண்வெளிக்குப் பறந்தனர்.
- இந்தத் திட்டத்தின் போது, 1965 ஆம் ஆண்டு மார்ச் 18 அன்று லியோனோவ் விண்கலத்திலிருந்து வெளியேறி 12 நிமிடங்கள் ஒன்பது வினாடிகள் விண்வெளியில் நடந்தார்.




# விளையாட்டுச் செய்திகள்

## உலக இளையோர் செஸ் சாம்பியன்ஷிப் 2019

- 2019 ஆம் ஆண்டின் உலக இளையோர் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியானது மும்பையில் நடத்தப்பட்டது.
- இந்தச் சாம்பியன்ஷிப் போட்டியானது சர்வதேச செஸ் கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப் பட்டது.
- இந்தச் சாம்பியன்ஷிப்பில் இந்தியா ஏழு பதக்கங்களை (மற்ற நாடுகளை விட அதிக பதக்கங்கள்) பெற்றுள்ளது.
- இதில் 1 தங்கம், 3 வெள்ளி மற்றும் 3 வெண்கலப் பதக்கங்கள் அடங்கும்.
- இந்தச் சாம்பியன்ஷிப்பில் இந்தியாவிற்கு அடுத்த படியாக ரஷ்யா 5 பதக்கங்களை வென்றுள்ளது.

| பெயர் | நிகழ்வு | பதக்கம் |
|---|---|---|
| பிரக்னாநந்தா | ஓபன் U18 | தங்கம் |
| அகர்வால் வந்திகா | மகளிர் U18 | வெள்ளி |
| ஸ்ரீஹரி L R | ஓபன் U14 | வெள்ளி |
| தேஷ்முக் திவ்யா | மகளிர் U14 | வெள்ளி |
| கோஷ் ஆரோன்யக் | ஓபன் U16 | வெண்கலம் |
| ஸ்ரீஸ்வான் மாரலக்சிஹாரி | ஓபன் U14 | வெண்கலம் |
| ரவி ரக்சித | மகளிர் U14 | வெண்கலம் |


# முக்கிய தினங்கள்

## உலக மூட்டு அழற்சி தினம் - அக்டோபர் 12

- உலக மூட்டு அழற்சி தினமானது அக்டோபர் 12 ஆம் தேதியன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டது.
- மூட்டுவாத நோய் மற்றும் தசைக் கூட்டு நோய்கள் உள்ளவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் குறித்து உலகளவில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு "டைம்2வொர்க்" என்பதாகும்.
- மூட்டு அழற்சி என்பது மூட்டுகளில் வலி மற்றும் விறைப்பை ஏற்படுத்தும் ஒரு அழற்சி

நிலையாகும்.

- இந்தத் தினமானது 1996 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப் படுகின்றது. இந்தத் தினமானது சர்வதேச மூட்டு அழற்சி மற்றும் வாத நோய் அமைப்பு என்ற அமைப்பால் நிறுவப்பட்டது.




## உலக இடம்பெயரும் பறவை தினம் - அக்டோபர் 12

- உலக இடம்பெயரும் பறவை தினமானது (WMBD - World Migratory Bird Day) அக்டோபர் 12 ஆம் தேதியன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டது.
- புலம்பெயரும் பறவைகள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "பறவைகளைப் பாதுகாத்தல்: நெகிழி மாசுபாட்டிற்கான ஒரு தீர்வை ஏற்படுத்துதல்" என்பதாகும்.





## சர்வதேசப் பேரிடர் அபாயக் குறைப்பு தினம் - அக்டோபர் 13

- அக்டோபர் 13 ஆம் தேதியன்று சர்வதேசப் பேரிடர் அபாயக் குறைப்பு தினம் அனுசரிக்கப்பட்டது.
- ஆபத்து குறித்து அறிதல் மற்றும் பேரிடர் அபாயக் குறைப்பு ஆகியவற்றை நோக்கிய ஒரு உலகளாவியக் கலாச்சாரத்தை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "முக்கியமான உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படைச் சேவைகளை சீர்குலைத்தல் ஆகியவற்றிற்கான பேரிடர் சேதத்தைக் குறைத்தல்" என்பதாகும்.
- 1989 ஆம் ஆண்டில், பேரிடர் அபாயக் குறைப்பிற்கான சர்வதேச தினமானது ஐக்கிய

நாடுகள் சபையின் பொதுச் சபையினால் நிறுவப்பட்டது.

- செண்டாய்க் கட்டமைப்பின் (2015 - 2030) ஏழு இலக்குகளை மையமாகக் கொண்ட பேரிடர் அபாயக் குறைப்பிற்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகத்தினால் 2016 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட "செண்டாய் ஏழு" என்ற பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக 2019 ஆம் ஆண்டுப் பதிப்பு தொடர்கின்றது.




## இதரச் செய்திகள்

### பிராண்ட் நிதியியல் தேசிய வணிக அடையாளங்கள் 2019

- பிராண்ட் நிதியியல் தேசிய வணிக அடையாளங்கள் - 2019 என்ற மிகவும் மதிப்பு மிக்க மற்றும் வலிமையான தேசிய வணிக அடையாளங்கள் குறித்த ஒரு ஆண்டு அறிக்கையானது பிராண்ட் பைனான்ஸ் என்ற நிறுவனத்தினால் வெளியிடப்பட்டது.
- வணிக அடையாள மதிப்பில் 18.7 சதவிகித வளர்ச்சியுடன் இந்தியா 2018 ஆம் ஆண்டில் 9வது இடத்தில் இருந்து 7வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- இந்தப் பட்டியலில் வணிக அடையாள மதிப்பில் 7.2% வளர்ச்சியுடன் அமெரிக்கா முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- சிங்கப்பூர் உலகின் வலிமையான தேசிய வணிக அடையாளமாக உருவெடுத்துள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★